(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 187.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2012 மே 24, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1063/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சீனா, அமெரிக்கா, இந்தியா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளினாலும் நிறுவனங்களினாலும் கடந்த 15 வருடங்களாக வழங்கப்பட்ட கடன்கள் அல்லது மானியங்களின் காலப்பகுதியின் முடிவின் போது செலுத்தப்படவுள்ள மொத்தத் தொகையினை அமெரிக்க டொலர்களிலும்;

(ii) இக்கடன்களின் சராசரி மீளச் செலுத்தல் கால அளவினை நாடுகள் அல்லது நிறுவனங்கள்வாரியாக வெவ்வேறாகவும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1322/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் கரன்தெனிய தேர்தல் தொகுதியிலுள்ள அனுருத்தகம ஜன உதான கிராமம் 1999 ஆம் ஆண்டில் மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது என்பதையும்

(ii) இக்கிராமத்தில் பெரும்பாலான வீடுகளின் உரிமையாளர்கள் இதுவரை இவ்வீடுகளில் குடியிருப்பதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வீடுகளில் குடியிருக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(இ) (i) அனுருத்தகம ஜன உதான கிராமத்தின் வீடுகள் தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடாத்தி பிரதேசதத்தின் வீடுகளற்ற வறிய குடும்பங்களுக்கு கைவிடப்பட்டுள்ள வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1448/ '11

3.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சனாதிபதி அவர்களின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1997/ '11

4.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004.07.22ஆம் திகதிய PS/CS/26/2004 ஆம் இலக்க அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம், சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்புக்கு இணைந்ததாக அதிலிருந்து ½ கிலோ மீற்றர் தூரத்தினுள் அமைந்துள்ள, காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான அனைத்து வனங்களையும், 1972ஆம் ஆண்டின் காணி சீர்திருத்தச் சட்டத்தின் 22(1) (ஊ) மற்றும் 44(ஐ) வாசகத்தின் பிரகாரம், வன பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஒப்படைப்பதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ii) குறிப்பிட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் 2508.4 ஹெக்டெயார் வனப் பிரதேசத்தை புதிதாக சிங்கராஜ வனத்திற்கு சேர்ப்பதற்கு உத்தேசமாயுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2020/ '11

5.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சிறைச்சாலைக் காவலர் – வகுப்பு இரண்டு மற்றும் நலனோம்புகை அலுவலர் – வகுப்பு இரண்டு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய அபேட்சகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களுக்கு, குறித்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தற்போது ஆட்சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஆட்சேர்க்கப்பட்ட ஆகக் குறைந்த வெட்டுப் புள்ளி யாது என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்டவாறு ஆட்சேர்க்கப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(vi) மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கு மேலதிகமாக வேறு ஆட்கள் ஆட்சேர்க்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vii) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2181/'11

6.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அசைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமநல சேவைகள்,வனசீவராசிகள் அமைச்சின் கீழுள்ள ஏதேனும் நிறுவனத்தினால் இற்றைவரை பழக்கப்பட்டுள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இனி வரும் காலத்தில் பழக்குவதற்காக இனங்காணப்பட்டுள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) யானை – மனித மோதல்களை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சினால் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) காட்டு யானைகளை பழக்குவதற்காகவும் யானை – மனித மோதல்களை கட்டுப்படுத்துவதற்காகவும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2268/ '12

7\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக இலங்கையில் பராமரிக்கப்படும் நீர்ப்பாசன திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை நீர்ப்பாசன புனரமைப்பின் கீழ் குளங்களை பராமரிப்பதற்காக மேற்படி திணைக்களம் செலவிட்டுள்ள பணத் தொகை ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இதனடிப்படையில் ஒவ்வொரு ஆண்டுக்குமாக போதியளவு பணம் செலவிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1468/ '11

8\.

கௌரவ அஜித் குமார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சுற்றாடல் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1654/ '11

9.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரங்கெத்த பிரதேச சபைக்கு உரித்தான கங்கபளாத்த எச்.எம்.பீ. பண்டா ஞாபகார்த்த நூலகம் தற்போது சுமார் ஒரு வருட காலமாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நூலகக் கட்டடம் மறுசீரமைக்கப்படாமை காரணமாக கூரை, கதவுகள், யன்னல்கள் மற்றும் மின்சாரக் கம்பி முறைமை பெருமளவு சேதமடைந்துள்ளதென்பதையும்;

(iii) நூலகம் மூடப்பட்டுள்ளதனால் ஆயிரத்திற்கும் அதிகமான வாசகர்கள் புத்தகங்களை வாசிக்கும் வாய்ப்பை இழந்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) துரிதமாக மேற்படி நூலக கட்டடத்தை மறுசீரமைத்து வாசகர்களிடம் உரிமையை கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1744/ '11

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் (இபெகூ) பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் நடவடிக்கைமுறையையும்;

(ii) மேற்படி நடைவடிக்கைமுறைக்கு அதிகாரமளிக்கும் முகவரையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டு யூன் மாத இறுதியிலிருந்து யூலை மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் குறைந்த தரத்திலான பெற்றோல் இறக்குமதி செய்வதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நடாத்தப்பட்ட ஆரம்பகட்டப் பரிசீலனையை குறைந்த தரத்திலான பெற்றோல் எவ்வாறு திருப்திப்படுத்தியது என்பதையும்;

(iii) அதைத்தொடர்ந்து அதன் தரம் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களில் அமையவில்லை என உறுதிசெய்வதற்கு அது எவ்வாறு மாற்றப்பட்டது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) குறைந்த தரத்திலான பெற்றோல் பாவனையின் காரணமாகப் பாதிப்படைந்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(ii) இம் மோசடியில் ஈடுபட்ட ஆட்களையும்;

(iii) மேற்படி மோசடி காரணமாக வரிசெலுத்துபவர்களுக்கு ஏற்பட்ட செலவினம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2004/ '11

11.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை மற்றும் 2011.01.01 முதல் 2011.09.01 வரையான காலப்பகுதியில் களுத்துறை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டுக்காக களுத்துறை மாவட்டத்தில் மதுபான உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் முகவரிகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2021/ ' 11

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதுள்ள முப்படை வீரர்களின் குடும்பங்களது எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2011 இன் வரவு செலவுத் திட்ட முன்மொழிவொன்றான படைவீரர்களின் குடும்பமொன்றில் பிறக்கின்ற மூன்றாவது பிள்ளைக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்கின்ற முன்மொழிவின் கீழ் இதுவரை மேற்படி கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதற்காக இனங்காணப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவை முன்வைக்க முன்னர் மூன்றாவது குழந்தையொன்று இருந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும் மேற்படி நலன் பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதையும்;

(iv) இதுவரை, மேற்படி கொடுப்பனவு வழங்கப்படவில்லையாயின், அதனை வழங்குவதற்கு ஆரம்பிக்கின்ற திகதி யாது என்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவை வழங்குவதானது எவ்வளவு காலம் வரை அமுலிலிருக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1655/ '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் பன்வில அலவத்துகிறிகமவில் அமைந்துள்ள கண்டி இராச்சிய காலகட்டத்திற்கு உரித்தான பண்டைய விஹாரையின் தொல் பொருட்கள் பல வருடங்களாக சேதமடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) தொல் பொருளியல் திணைக்களத்தின் அலுவலர்கள் மேற்படி தொல் பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவித்து பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் இது வரை மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விஹாரையை தொல் பொருளியல் திணைக்களத்தின் அலுவலர்கள் பரிசீலனை செய்துள்ள போதிலும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப் படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) மேற்படி விஹாரையின் மறுசீரமைப்பு பணிகள் எதிர்வரும் காலத்தில் ஆரம்பிக்கப்படுமாயின், அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1745/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கட் சுற்றுப் போட்டிக்கான செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட செயலாளரின் பெயரையும்;

(ii) மேற்படி நியமனம் யாரால் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) இந் நியமனத்திற்கு வேறு நபர்கள் எவரேனும் பரிசீலிக்கப்பட்டனரா என்பதையும்;

(iv) அவ்வாறெனின், அவர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) உலகக்கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டிக்கான செயலகத்தின் செயலாளர் பதவிக்கு வழங்கப்படடிருந்த தத்துவங்களையும்;

(ii) அப்பதவிக்குரித்தான அதிகாரங்களை அவர் நிறைவேற்றினாரா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2022/ '11

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கனேவத்த பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் கனேவத்த பொத்துவாகொன்ன வீதியை மறுசீரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) காபட் இடப்பட்டு அல்லது வேறு விதத்தில் மறுசீரமைக்கப்படும் மேற்படி வீதியின் அகலம் மற்றும் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கான மதிப்பீட்டின் படி நிர்மாணிக்கப்படவேண்டிய பாலங்களினதும் மதகுகளினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) பொத்துவாகொன்ன வீதியை மறுசீரமைப்பதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்படும் போது முறையான கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டவரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதி மறுசீரமைக்கப்படுவதற்கு முன்னர் நிலவிய அகலம் எவ்வளவென்பதையும்;

(ii) வீதியை நிர்மாணித்து முடித்ததன் பின்னர் இதற்காக செலவாகிய மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 2010 ஒற்றோபர் மாதம் 21ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை 2012 பெப்புருவரி மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இயலாதுள்ளதால், குறிப்பிட்ட தெரிகுழுவுக்கு வழங்கப்பட்ட கால எல்லையை 96ஆம் இலக்க நிலையியல் கட்டளையின் பிரகாரம் 2012ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 32ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 23ச ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 29 ஆம் திகதிய 1738/37ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.11ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 9.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

10.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.